## பெரியாழ்வார் அருளிச் செய்த

# பெரியாழ்வார் திருமொழி 2-8 - இந்திரனோடு[1]

## (கண்ணனை த்ருஷ்டி தோஷம் வாராதபடி திருவந்திக் காப்பிட அழைத்தல்)

192 * இந்திரனோடு பிரமன் * ஈசன் இமையவர் எல்லாம் *
மந்திர மாமலர் கொண்டு * மறைந்துவராய் வந்து நின்றார் **
சந்திரன் மாளிகை சேரும் * சதுரர்கள் வெள்ளறை நின்றாய்! *
அந்தியம் போது இதுவாகும் * அழகனே! காப்பிட வாராய் 1

193 கன்றுகள் இல்லம் புகுந்து * கதறுகின்ற பசுவெல்லாம் *
நின்றொழிந்தேன் உன்னைக் கூவி * நேசமேல் ஒன்றும் இலாதாய்! **
மன்றில் நில்லேல் அந்திப் போது * மதிள் திருவெள்ளறை நின்றாய்! *
நன்று கண்டாய் என்தன் சொல்லு * நான் உன்னைக் காப்பிட வாராய் 2

194 செப்போது மென்முலையார்கள் * சிறுசோறும் இல்லும் சிதைத்திட்டு *
அப்போது நான் உரப்பப் போய் * அடிசிலுமுண்டிலை ஆள்வாய்! **
முப்போதும் வானவர் ஏத்தும் * முனிவர்கள் வெள்ளறை நின்றாய்! *
இப்போது நான் ஒன்றும் செய்யேன் * எம்பிரான்! காப்பிட வாராய் 3

195 கண்ணில் மணல் கொடு தூவிக் * காலினால் பாய்ந்தனை என்றென்று *
எண்ணரும் பிள்ளைகள் வந்திட்டு * இவரால் முறைப்படுகின்றார் **
கண்ணனே! வெள்ளறை நின்றாய்! * கண்டாரோடே தீமை செய்வாய்! *
வண்ணமே வேலையதொப்பாய்! * வள்ளலே! காப்பிட வாராய் 4

196 பல்லாயிரவர் இவ்வூரில் பிள்ளைகள் * தீமைகள் செய்வார் *
எல்லாம் உன்மேல் அன்றிப் போகாது[2] * எம்பிரான்! நீ இங்கே வாராய் **
நல்லார்கள் வெள்ளறை நின்றாய்! * ஞானச் சுடரே! உன் மேனி *
சொல்லார வாழ்த்தி நின்றேத்திச் * சொப்படக் காப்பிட வாராய் 5

197 கஞ்சன் கறுக்கொண்டு நின் மேல் * கருநிறச் செம்மயிர்ப் பேயை *
வஞ்சிப்பதற்கு விடுத்தான் என்பதோர் * வார்த்தையும் உண்டு **
மஞ்சு தவழ் மணி மாட * மதிள் திருவெள்ளறை நின்றாய்! *
அஞ்சுவன் நீ அங்கு நிற்க * அழகனே! காப்பிட வாராய் 6

198 கள்ளச் சகடும் மருதும் * கலக்கழிய உதை செய்த *
பிள்ளை அரசே! நீ பேயைப் பிடித்து * முலை உண்ட பின்னை **
உள்ளவாறு ஒன்றும் அறியேன் * ஒளியுடை வெள்ளறை நின்றாய்! *
பள்ளிகொள் போது இதுவாகும் * பரமனே! காப்பிட வாராய் 7

199 இன்பமதனை உயர்த்தாய்! * இமையவர்க்கு என்றும் அரியாய்! *

[1] இது நித்யாநுஸந்தாநம்
[2] போகா

கும்பக் களிறட்ட கோவே! * கொடுங்கஞ்சன் நெஞ்சினிற் கூற்றே! **
செம்பொன் மதிள் வெள்ளறையாய்! * செல்வத்தினால் வளர் பிள்ளாய்! *
கம்பக் கபாலி காண் அங்குக் * கடிதோடிக் காப்பிட வாராய் 8

200 இருக்கொடு நீர் சங்கில் கொண்டிட்டு * எழில் மறையோர் வந்து நின்றார் *
தருக்கேல் நம்பி! சந்தி நின்று * தாய் சொல்லுக் கொள்ளாய் சில நாள் **
திருக்காப்பு நான் உன்னைச் சாத்தத் * தேசுடை வெள்ளறை நின்றாய்! *
உருக்காட்டும் அந்தி விளக்கு * இன்றொளி கொள்ள ஏற்றுகேன் வாராய் 9

201 * போதமர் செல்வக் கொழுந்து * புணர் திருவெள்ளறையானை *
மாதர்க்குயர்ந்த அசோதை * மகன் தன்னைக் காப்பிட்ட மாற்றம் **
வேதப் பயன் கொள்ள வல்ல * விட்டுசித்தன் சொன்ன மாலை *
பாதப் பயன் கொள்ள வல்ல * பத்தருள்ளார் வினை போமே 10

**அடிவரவு:** இந்திரனோடு கன்றுகள் செப்பு கண்ணில் பல்லாயிரவர் கஞ்சன்
கள்ளம் இன்பமதனை இருக்கொடு போதமர் வெண்ணெய்விழுங்கி